ஞாலகுருவின் படைப்புக்கள்

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,127 ஆனி மாதம்

# அரசியலுக்கு ஆன்மீகம் தேவைப்படுகிறது! ஆன்மீகத்திற்கு அரசியல் தேவைப்படுகிறது!!



பதினெண்சித்தர் மடாதிபதி, இந்துவேத நாயகம்,
இந்துமதத் தந்தை, இந்துவேத இந்துமதத் தலைமை ஆச்சாரிய
குருபீடக் குருதேவர், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்

இந்து இலக்கியக் கழக வெளியீடு

**43,73,127ஆம் ஆண்டின் ஆனி மாத வெளியீடு**

***தலைப்பு:-*** **அரசியலுக்கு ஆன்மீகம் தேவைப்படுகிறது! ஆன்மீகத்திற்கு அரசியல் தேவைப்படுகிறது!!**

# உள்ளுறை

1. **“அரசியலுக்கு ஆன்மீகம் தேவைப்படுகிறது! ஆன்மீகத்திற்கு அரசியல் தேவைப்படுகிறது!!”** - குருதேவர் அவர்கள் எல்லாத் தமிழர்களுக்கும் விடுத்த பொதுவான அறிவிப்பு.

2. **“சேலம் பயணத்தில் விடுதியில் குருதேவர் கூறியது”** - சுற்றுப்பயணத்தின் போது உடல்நலமில்லாத நிலையிலும் குருதேவர் மாணுக்கர்களுக்கு அளித்த விளக்கங்களும், அறிவுரைகளும்.

**Disclaimer**

இந்த நூலில் வெளியிடப்படுகின்ற கட்டுரைகள் யாவையும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்கள் எழுதியும் எழுதுவித்தும் தந்துள்ள கட்டுரைகளின் நகல்களே! இந்தக் கட்டுரைகளின் கருத்துக்களுக்கு முழு உரிமை பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களுக்கே உரியது என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைமைப்பீடம்,
24-8-1995.

# "அரசியலுக்கு ஆன்மீகம் தேவைப்படுகிறது! ஆன்மீகத்திற்கு அரசியல் தேவைப்படுகிறது!!"

## பொதுமக்களுக்கு ஓர் அறிவிப்பு

(1)

♦ தனிமனித வாழ்வுகள் செம்மையாக இல்லை.

♦ குடும்ப வாழ்வுகள் அமைதியாக இல்லை.

♦ சமுதாய வாழ்வில் கட்டுப்பாடும், ஒழுங்கும் இல்லை.

♦ அரசியல் வாழ்வில் ஒன்றுமே புரியவில்லை. மக்கள் எல்லோரும் துன்பப்படுகின்றனர், தொல்லைப்படுகின்றனர். எல்லாவற்றிலும் பற்றுக்குறையினால் மிகவும் வேதனைப்படுகின்றனர்.

(2) அதாவது, இன்றைய அரசியலால் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு நான்கிலுமே சட்டதிட்டக் கட்டுப்பாடுகள் செயலில் இல்லை. நான்கிலுமே நீதி, நெறிமுறைகள் சீர்கெட்டு சீரழிந்து எங்கும் எதிலும் நிறைவு இல்லை! நிம்மதி இல்லை!

(3) இவற்றையெல்லாம் அறுபதாண்டு காலமாக கண்காணித்து வந்துள்ள ஆதிசிவனாரின் திருத்தோன்றல், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, கருகுல ஆதீனம், கருமூலப் பண்டாரம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார், அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார் அவர்கள்; "... 'அரசியலுக்கு

ஆன்மீகம் தேவைப்படுகிறது', 'ஆன்மீகத்திற்கு அரசியல் தேவைப்படுகிறது'..." என்பதை ஆராய்ந்து முடிவெடுத்துள்ளார்.

(4) குவலய குருபீடம், அருளுதி ஆதி கடந்த தம்பிரான், அந்தணர் அண்ணல், ஞாளுச்சாரியார்; நான்கு உகங்களாக இருந்து வருகின்ற 'இந்து வேத முன்னேற்ற கழகம்' என்ற நிறுவனத்தையும், அதன்கீழ் உள்ள 48 நிறுவன நிர்வாகங்களையும் திருமடத்தைச் சேர்ந்த பல இலட்சக்கணக்கான பத்தர்களையும் ஒன்றுதிரட்டி; இ.மு.க. (I.M.K.) என்ற அரசியல் கழகத்தைத் தோற்றுவித்திருக்கின்றார். இதன் கொள்கைகள் அனைத்தும் இருக்கு வேதம் (ரிக் வேதம்), அசுர வேதம் (யசுர் வேதம்), அதர்வான வேதம் (அதர்வண வேதம்), யாம வேதம் (சாம வேதம்), மனுநீதி நூல்கள் - 18 .... முதலியவைகளை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டிருக்கின்றன.

(5) இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை என்ற உரிமையும் பெருமையும் உடைய பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி ஏற்கனவே ஆதிசிவனார் தமது அரச பாரம்பரியம், குரு பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம் ஆகிய மூன்றிலுமே; "கலியுகத்தில் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியால்தான் இந்து வேத மதமான இந்துமதம் இந்த குவலயம் முழுவதும், இந்த புவிப்பரப்பு முழுவதும் நல்லாட்சி புரியும்படிச் செய்யப்படும். அதாவது, அருளாட்சி அமைந்திடும்" என்று கூறியிருப்பதால்; இப்பொழுது இ.மு.க.வை அரசியல் கழகமாக அறிவித்துச் செயலாக்கம் புரியப் புறப்பட்டிருக்கிறார்.

(6) இந்த அருளாட்சியால்தான்

♦ உலக ஆன்மநேய ஒருமைப்பாடு உருவாகும்,

♦ உலக சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் உருவாகும்,

♦ தனிமனித வாழ்வில் விடுதலை, குடும்ப வாழ்வில் விடுதலை, சமுதாய வாழ்வில் விடுதலை, அரசியல் வாழ்வில் விடுதலை, அகப்

பண்பாட்டு விடுதலை, புற நாகரிக விடுதலை, மத விடுதலை, இன விடுதலை, மொழி விடுதலை, மனிதத்துவ வளர்ச்சி (மனிதத் தத்துவ வளர்ச்சி), மனித நேய ஒருமைப்பாடு, மனித அன்பு, அமைதி, நிம்மதி, நிறைவு, ஒற்றுமை, பற்று, பாசம், .... முதலியவை பிழைத்து தழைத்து செழித்து வளர்ந்தோங்கிடும்.

♦ உலக சமாதானம், உலக ஒற்றுமை, உலக மானுட பற்று பாசம் அன்பு கனிவு இனிமை .... முதலியவை வளர்க்கப்பட்டிடும்.

♦ 64 ஆயகலைகள், (48 + 72) 120 அருட்கலைகள், 96 தத்துவங்கள், 144 செயல் சித்தாந்தங்கள், ... முதலியவை அனைத்தும் போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்க்கப்பட்டிடும்.

(7) இப்பேருண்மைகளை பொதுமக்கள் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி, ஒப்புக்கொண்டு, ஏற்றுக் கடைப்பிடிக்க முன்வர வேண்டும். இந்த அழைப்பு மூலம் முதலில் தமிழகத்துப் பெருமக்கள் அனைவரும், தங்களுடைய ஐயங்களையெல்லாம் அகற்றிக் கொண்டு இந்துவேத முன்னேற்றக் கழகத்தில் உறுப்பினராகச் சேர வேண்டும். இதில் எல்லா மக்களும் எந்தவிதமான சாதி மத வேறுபாடு இன்றிச் சேர்ந்திடல் வேண்டும். இந்துவேதக் கொள்கைகள் எல்லாவிதமான மத ஆச்சரியங்களுக்கும், மாச்சரியங்களுக்கும் அப்பாற்பட்டது. நான்கு வேதத்திலும் சாதி என்ற அமைப்பே இல்லை. சாது + ஆதி = சாதி என்ற பெயரில் முனிவர், இருடி, மகான், ஞானி, தவசி, சித்தியார், அடிகளார், .... எனப்படும் அருளாளர்களின் பெயரில்தான் மக்கள் தனித்தனிப் பிரிவுகளாக இருந்திட்டார்கள். இது தவிர, இன்றைக்கு இருப்பது போல் எந்தவிதமான சாதி வேறுபாடுகளோ, ஏற்றத்தாழ்வுகளோ, தீண்டாமைக் கொடுமைகளோ அந்த காலத்துப் பிரிவுகளிடையே இல்லை. எல்லோரும் சமத்துவத்தோடு, சகோதரத் தத்துவத்தோடு, எந்தவிதமான வெறியோ, பேராசையோ, அகம்பாவமோ, ஆணவமோ, ஆக்கிரமிப்போ, .....

இல்லாமல்; எங்கும் சமாதானம், எதிலும் சமாதானம்; எங்கும் சமத்துவம், எதிலும் சமத்துவம்; எங்கும் மானுடநேயம், எதிலும் மானுடநேயம்; எங்கும் அன்பு நெறி, எதிலும் அன்பு நெறி; எங்கும் மனிதப் பண்பு, மனிதப் பண்பாட்டு மென்மை, எதிலும் மனிதப் பண்பு, மனிதப் பண்பாட்டு மென்மை; எங்கும் நிறைவு, எதிலும் நிறைவு; எங்கும் நிம்மதி, எதிலும் நிம்மதி; எங்கும் உண்மை, எதிலும் உண்மை; எங்கும் மனித நலம் நாடல், எதிலும் மனித நலம் நாடல், ..... என்ற மேம்பட்ட வாழ்க்கையை வாழச் செய்வதே இந்துவேதக் கொள்கையின் குறிக்கோள்.

(8) மனித வாழ்வில் எவ்விதமான ஏக்கமோ, தேக்கமோ, வீக்கமோ, நடுக்கமோ, ஒடுக்கமோ, அடக்கமோ இல்லாமல் இருக்கும்படி செய்யும் அருளாட்சி அமைக்கப்படல் வேண்டும். இந்த அருளாட்சிக்கு அழைப்பு விடுக்கிறோம். எந்தவிதமான தயக்கமும் இன்றி எல்லா மடாதிபதிகளும், பீடாதிபதிகளும், ஆச்சாரியார்களும், சன்னிதானங்களும், கோயில் பூசாறிகளும், தீத்தச்சர்களும் (தீட்சிதர்களும்), பட்டர்களும், பட்டாச்சாரியார்களும், அருட்சினையாளர்களும் (அர்ச்சகர்களும்), ஓதுவார்களும், தேசிகர்களும், வேத விற்பன்னர்களும், வேத அத்தியாயனர்களும், வேத பாராயணர்களும், வேத வாத்தியார்களும், வேத உருத்தரர்களும், வேத உருத்திரர்களும், வேத உருத்திறர்களும், வேதியர்களும், வேத செவிப்பாளர்களும், எல்லா பத்தர்களும், எல்லா ஆத்திகப் பெருமக்களும், ..... கட்டாயமாக நாட்டில் நல்லாட்சியான அருளாட்சி அமைந்திட இ.மு.க. (I.M.K.) எனும் இந்துவேத முன்னேற்றக் கழகத்தை அரசியல் கழகமாக ஏற்று ஆங்காங்கே இக்கழகத்தின் மெய்ஞ்ஞானக் கொடியை (சீவலிங்கக் கொடியை) ஏற்றுவித்து இ.மு.க.வின் வெற்றிக்கு உறுதி செய்து தர வேண்டும்.

(9) எல்லா பத்தர்களும், ஆத்திகப் பெருமக்களும், ஆன்மீக வாதிகளும் நெற்றியில் திருநீறோ, குங்குமமோ, திருநாமமோ, சாந்து அல்லது சந்தனப் பொட்டோ வைக்கக் கூடிய அனைவருமே இ.மு.க. உறுப்பினர்கள்தான். இன்னும் சொல்லப் போனால் இந்தியாவில் பிறந்த அத்தனை பேர்களுமே இந்துக்கள்தான். எனவே, இந்த இந்துக்கள் அனைவருமே உடனடியாக இ.மு.க.வில் உறுப்பினர்களாகச் சேர்ந்தாக வேண்டும். நீங்கள் உறுப்பினராவதற்கு மறுத்தாலும் சரி, வெறுத்தாலும் சரி இ.மு.க.தான் உலகம் முழுவதும் இந்துவேத மதத்தை கொள்கையாகக் கொண்டு ஆளப் போகிறது என்ற பேருண்மையை ஒப்புக் கொண்டேயாக வேண்டும்; புரிந்து உணர்ந்து கொண்டேயாக வேண்டும்.

(10) இ.மு.க. இந்துக்கள் அனைவருக்கும் ஒரு பொதுவான கழகம். இதை இந்துக்கள் அனைவரும் உணருவதைப் பொறுத்துத்தான் இந்துமதம் இனியும் இருந்திடுமா அல்லது இல்லாது போய்விடுமா? என்ற பலரின் கேள்விக்கு உரிய விடை கிடைத்திடும். இந்துக்களே! தன்னம்பிக்கை பெறுங்கள்! ஒற்றுமைப்படுங்கள்! கழகத்திற்கு கிளைகளை உருவாக்குங்கள். எல்லோருக்கும் சரணாலயம் ஆகட்டும் இ.மு.க. இ.மு.க.வின் புதிய கட்டமைப்புகள்தான் இந்தியாவைக் கட்டிக் காத்திடும். "இமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரி கடலடி மணல்பரப்பு வரை வாழுகிறவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தமிழர்கள்தான்" என்று பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி தமது அரசபாரம்பரியத்தில் குறிப்பிடுகின்றார். ஆனால், ஆதிசிவனாரோ "இந்துவேதம் எனும் ஆலமரத்தின் இலைகளாகவோ, கிளைகளாகவோ அல்லது விழுதுகளாகவோதான் புதிய வேதங்களோ, மதங்களோ உண்டாகிட முடியும்" என்று மிகத் தெளிவாக கூறியிருக்கின்றார். ஆகையால் இந்த உலகம் முழுவதும் உள்ள மதங்கள் அனைத்தும்

இந்துவேதத்திற்கு துணையானவைதான்; இந்துவேதத்தில் இருந்து தோன்றியவைதான் என்ற பேருண்மையை இந்துக்கள் உணரவேண்டும்.

(11) ஆதிசிவனுர், இந்துவேதம் நான்கையும், இந்துவேத நூல்கள் 396ஐயும், இந்துமத நூல்கள் 36ஐயும், அனுதிசிவனுருடைய மனுநூல்கள் 18ஐயும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் எழுதியுள்ளார். எனவே, தமிழ்நாடுதான் மனுநீதி நூல்களுக்கும், இந்துமத நூல்களுக்கும், இந்துவேத நூல்களுக்கும் தாயகம். அதாவது, தாய்வீடு.

(12) தமிழர்கள்தான் இந்துவேதத்திற்கும், இந்துமதத்திற்கும் மூலவர்கள், முதல்வர்கள், தத்துவ வித்துக்கள், வாரிசுகள், காவலர்கள். எனவேதான், முதலில் தமிழ்நாட்டில் இந்து வேத முன்னேற்றக் கழகம் தனது அருளாட்சியை நிலைநாட்டி; அடுத்தடுத்துள்ள மாநிலங்களுக்கு எல்லாம் இ.மு.க.வின் கொள்கையை வளர்த்து; இந்தியாவை இந்துவேத இந்துமத ஆட்சிக்குரிய நாடாக்கிடும்.

(13) இ.மு.க.வின் முழக்கங்கள்:-

- இ.மு.க.வை வளர்ப்போம், இந்தியாவைக் காப்போம்.
- இ.மு.க. மூலம் அருட்படையை திரட்டுவோம்; அருளாட்சியை அமைத்திடுவோம்.
- இ.மு.க.வின் மூலம் எல்லோருடைய உள்ளங்களிலும், இல்லங்களிலும் இந்துவேதமும், இந்துமதமும் இடம் பெறச் செய்வோம்.
- இ.மு.க.வின் மூலம் எல்லாக் கோயில்களையும் பாதுகாப்போம்.
- இ.மு.க.வின் மூலம் எல்லாக் கோயில் நிர்வாகத்தையும் தன்னுட்சிநிலை பெறச் செய்வோம்.
- இ.மு.க. மூலம் கோயில் ஊழியர்களுக்கு அரசு ஊழியருக்குச் சமமான சம்பளம் தரப்படும்.

♦ இ.மு.க.வின் மூலம் ஒவ்வொரு கோயிலுக்கும் உரிய சொத்துக்கள், அந்தந்த கோயில்களின் நேரடி ஆட்சிக்குக் கொண்டு வரப்படும்.

♦ இ.மு.க.வே அருளுலக பொருளுலக இருளை அகற்றும், இன்னலை நீக்கும்.

♦ இ.மு.க.வே ஏட்டுப் படிப்பை நாட்டு நடப்புக்கு உரியதாக்கிடும்.

♦ இ.மு.க.வே தொழிற்கல்வியை உயர்நிலைப் பள்ளியில் இருந்தே கற்றுக் கொடுக்க ஆரம்பித்திடும்.

♦ இ.மு.க.வே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும்.

♦ இ.மு.க.வே பணி ஓய்வு காலத்திற்கு முன்பே, நன்ருக உடல்நலம் இருக்கும்போதே வேலையை விட்டு நீக்கும் ஆள் குறைப்பு திட்டத்தை ஒழிக்கும்.

♦ இ.மு.க.வே எல்லாத் துறைகளிலும் கம்ப்யூட்டர்களை புகுத்தி ஆள் குறைக்கும் திட்டத்தைத் தடுத்து நிறுத்தும்.

♦ இ.மு.க.வே விவசாயிகளுக்கு 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கும்.

♦ இ.மு.க.வே நல்ல விளைச்சல் நிலங்களையும், ஏரி குளங்களையும் தூர்த்து வீடு கட்டும் திட்டத்தை தடுத்து நிறுத்தும்.

♦ இ.மு.க.வே தொழிற்சாலைகள் எல்லாம் தலைநகரைச் சுற்றியே அமைப்பதை விடுத்து, நாடு முழுவதும் பரவலாக கிராமங்கள் தோறும் சிறிய சிறிய தொழிற்சாலைகளை உருவாக்கும் திட்டத்தைச் செயலாக்கும்.

♦ இ.மு.க.வே மக்கள் கிராமங்களைக் காலி செய்து விட்டு தலைநகரங்களை நோக்கிக் குடியேற வருவதைத் தடுப்பதற்காக; அரசு அலுவலகங்களை மாவட்டங்கள் தோறும், வட்டங்கள் (தாலுக்கா) தோறும் பிரித்துப் பிரித்து அமைக்க ஏற்பாடு செய்யும். அதற்காக நாடு முழுவதும் புதிய புதிய வசதிகளை நகரத்தில் உள்ளது போல் பரவலாக தோற்றுவித்திடும்.

♦ இ.மு.க.தான் மருத்துவ கல்லூரிப் படிப்பிற்கும், பொறியியல் கல்லூரிப் படிப்பிற்கும், தொழிற்கல்லூரி படிப்பிற்கும் மட்டுமே அதிக அக்கறையும், ஆர்வமும் நாட்டில் காட்டப்படுவதால், நாடு முழுவதும் பரவலாக அதாவது, (தாலுக்கா தோறும்) வட்டாட்சி தோறும், ஏற்கனவே இருக்கின்ற கல்லூரிகளோடு இணைத்தோ அல்லது தனித்தோ புதிய கல்லூரிகள் உருவாக்கிடும். அதாவது அடிப்படையான உண்மைகளை, செயல்களை, கலைக் கல்லூரிகளிலேயே அனைத்து அறிவியல் நுட்ப வசதிகளுடன் எல்லோரும் படித்துக் கொள்ளும்படி வாய்ப்பு வசதி செய்து தரும்.

♦ இ.மு.க.தான் படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கும். இதற்குரிய புதிய புதிய திட்டங்களை கீழை நாட்டு அறிஞர்களை வைத்து ஆய்வுகள் செய்து உருவாக்கிடும்.

♦ இ.மு.க.தான் கட்டிட வேலைத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பிற கிராம / குடிசைத் தொழிலாளர்கள் முறையான பயிற்சிகள் கொடுத்து அவர்களுடைய ஊதியத்தை வரையறை செய்யும்.

♦ இ.மு.க.தான் மீனவர்களுக்கும் மலைவாழ் மக்களுக்கும் எல்லாவிதமான வசதிவாய்ப்புகளையும் உருவாக்கிக் கொடுக்கும்.

♦ இ.மு.க.தான் இலஞ்சம், கையூட்டு, ஊழல் முதலியவைகளை முறையாக மேலிடத்திலிருந்து கீழிடம் வரை தடுத்து, அகற்றி, எல்லோரையும் பாதுகாத்திடும்.

♦ இ.மு.க.தான் ஏற்கனவே உள்ள அரசியல் கட்சிகளால் அதாவது, ஆங்கிலேயர்கள் ஆட்சிக்குப் பிறகு பதவி ஏற்றிட்ட கட்சிகள் அனைத்தும் அரசாங்க ஒப்பந்தக்காரர்களை (காண்டிராக்டர்களை) தவறான முறையில் கையூட்டின் மூலம் பணிகளை அரைகுறையாகச் செய்யும்படி அனுமதிப்பதை முழுமையாகத் தடுத்து நிறுத்தி ஒப்பந்தக்காரர்கள் திட்டங்களை நல்லபடியாகச் செய்தேயாகிடும்படி செய்திடும்.

♦ இ.மு.க.தான் கல்வியின் பெயரால் மருத்துவத்தின் பெயரால் எண்ணற்ற நிறுவனங்கள் பகற்கொள்ளை அடிப்பதைத் தடுத்திடும்.

**குறிப்பு**:- இப்படிப்பட்ட திட்டங்களை தன்னலமில்லாத, ஆசையே இல்லாத, பொதுமக்களின் நலத்தையே விரும்புகின்ற பத்தியுள்ளம் படைத்த அருளாளர்களால்தான் நிகழ்த்திட முடியும். அதாவது, தனிமனிதனின் வாழ்க்கை ஒழுக்கமாகவும், கட்டுப்பாடாகவும், பத்தியுணர்வு மிகுந்ததாகவும் இருந்தால்தான் குடும்ப வாழ்க்கை சிறப்பாக அமையும். குடும்ப வாழ்வில் பத்தியுணர்வு மிகுந்து இருந்தால்தான் குடும்பப்பற்று, பாசம், கட்டுப்பாடு, கட்டுக்கோப்பு, ... முதலியவைகள் சிறப்பாக அமைந்திடும். அப்படிக் குடும்பங்கள் கட்டுக்கோப்பாக சிறப்பாக அமைந்தால்தான் சமுதாயத்தில் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளும், உண்மையான ஒழுங்கான சமுதாய நடைமுறைகளும் எல்லோருக்கும் பாதுகாப்பு உடைய புதிய புதிய கட்டமைப்புக்களும் செயல்பட்டிட முடியும். அத்தகைய நல்லதொரு நிலை வந்தால்தான் அரசியல் எனப்படும் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய (M.L.A.க்கள், M.P.க்கள்) சட்டசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களாக அருளாளர்களே பொறுப்பேற்கும் நிலை உருவாகிட முடியும். அப்பொழுதுதான் நல்லாட்சி கிடைக்கும். அத்தகைய நிலையை இ.மு.க.வால்தான் உருவாக்க முடியும்! இ.மு.க.வால்தான் உருவாக்க முடியும்!! இ.மு.க.வால்தான் உருவாக்க முடியும்!!!

(14) இ.மு.க. இப்படி அறுதியிட்டு, உறுதி கூறுவதற்குக் காரணம் இந்த நூற்றுண்டு ஆரம்ப காலத்தில் இருந்து; அதாவது இந்திய விடுதலைப் போராட்டம் வேகமான வெறி நிலையில் வளர்ந்து கொண்டிருந்த காலக்கட்டத்தில் கலைப் புரட்சி, கல்விப் புரட்சி, தனிமனித எண்ணப் புரட்சி, தனிமனித சிந்தனைப் புரட்சி, சமுதாயத்தின் கருத்துப் புரட்சி, இலக்கியப் புரட்சி, சமுதாய எண்ணப் புரட்சி, சமுதாயச் சிந்தனைப் புரட்சி, சமுதாயத்தின் அகப்பண்பாட்டுப்

புரட்சி, சமுதாயத்தின் புறநாகரிகப் புரட்சி, .... முதலியவைகளை தோற்றுவித்துக் கொண்டே வந்திருக்கிறது இ.மு.க. அதாவது, இ.மு.க. என்பது உக உகமாக இருந்து வரக் கூடிய ஓர் அமைப்பு. அந்தந்த நூற்றாண்டில் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் பாதுகாத்திட போராடி வந்திருக்கிறது. அதாவது, சித்தர்கள் கருவூரார் வழியினரும், காகபுசுண்டர் வழியினரும்தான் ஒவ்வொரு நூற்றாண்டிலும் இந்துவேதத்திற்காகவும், இந்துமதத்திற்காகவும் போராடியிருக்கிறார்கள், தலைமை தாங்கியிருக்கிறார்கள்.

(15) அதாவது சித்தர் கருவூரார் பரம்பரையினரும், சித்தர் காகபுசுண்டர் பரம்பரையினரும் <u>‘இமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரி கடலடி மணற்பரப்பு வரையிலும் பரந்து விரிந்து கிடக்கின்ற இந்திய நாடுதான் இந்து நாடு, இந்துவேத நாடு, இந்துமத நாடு’ என்ற பேருண்மையை இந்துக்கள் உணர வேண்டும்</u> என்று போராடி வந்திருக்கிறார்கள். ஏனென்றால்,

♦ இவர்களைச் சார்ந்தவர்களின் கைகளில்தான் அனாதிகால சிவபெருமான்களாகிய மனுநீதியார்கள் எழுதிய 18,00,000 சுருதிகள் அடங்கிய மனுநீதி நூல்கள் 18உம் இருக்கின்றன.

♦ 1,10,592 நாள் உரைக்கோவை வாசக மலர்களை உடைய இருக்கு வேதம் இருக்கின்றது.

♦ 1,10,592 நாள் உரைக்கோவை வாக்குகளை உடைய அசுர வேதம் (யஜீர் வேதம்) இருக்கின்றது.

♦ 1,10,592 நாள் உரைக்கோவை வாக்கிய மலர்களை உடைய அதர்வான (அதர்வண வேதம்) வேதம் இருக்கின்றது.

♦ 1,10,592 நாள் வாசக மலர்களை உடைய யாம வேதம் (ஸாம வேதம்) இருக்கின்றது.

♦ 4,42,368 சூலகங்கள் (சுலோகங்கள்) இவர்களிடம்தான் இருக்கின்றன.

♦ இந்து மத நூல்கள் 36உம் இவர்களிடம்தான் இருக்கின்றன.

♦ இந்து வேதத்திற்குரிய 396 நூல்களும் இவர்களிடம்தான் இருக்கின்றன.

♦ நான்கு உக வரலாறுகளையும் விளக்குகின்ற குரு பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம் முதலியவைகள் இவர்களிடம்தான் இருக்கின்றன.

எனவேதான், இ.மு.க.வினுல் மட்டுமே, அதாவது சித்தர் கருவூரார்களும், சித்தர் காகபுசுண்டர்களும் உருவாக்கியுள்ள பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியாகவும், பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியாகவும் இருப்பவர்களால்தான் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் பாதுகாத்திட முடியும்! பாதுகாத்திட முடியும்!! பாதுகாத்திட முடியும்!!!

(16) இன்றைக்கு 1857ஆம் ஆண்டு நடந்த சிப்பாய் கலகத்தை முதல் சுதந்தரப் போராட்டம் என்ற பெயரால் நூற்றாண்டு விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது இன்றைய அரசு. ஆனுல், அந்த புரட்சிக்காக மலேசியாவிலும், சிங்கப்பூரிலும், இலங்கையிலும், திபெத், பூடான் முதலிய இடங்களில் இருந்தும் செயல்வீரர்களை வரவழைத்து இந்தியாவில் இருந்த நூற்றுக்கணக்கான சிறிய, பெரிய அரசர்களையும், சமீன்தார்களையும் ஒன்றுதிரட்டி சிப்பாய் கலகத்தை உருவாக்கியவர் கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் எனும் உ. இராமசாமிப் பிள்ளையும் (கருவூரார் பரம்பரையைச் சேர்ந்தவர்), சித்தர் காகபுசுண்டரைச் சேர்ந்த காக்கையர் க. வெள்ளைச்சாமிப் பிள்ளையும்தான். ஆனுல், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு மோசமானதாகவும், மோசடியாகவும் இருப்பதால்தான் சிப்பாய்க் கலகத்தை நடத்திய சித்தர்கள் இருவர்களின் பெயர்களும் மறைக்கப்பட்டு விட்டன.

(17) 20ஆம் நூற்றாண்டு இந்திய வரலாற்றை எடுத்துக் கொண்டால் இந்துவேதத்திற்காக, இந்துமதத்திற்காக இந்திய காங்கிரசை எதிர்த்து "இந்துவேதம் படிப்போம், இந்துமதத்தைப் பாதுகாப்போம்" என்று

இந்திய மொழிகள் அனைத்திலும் குரல் கொடுத்து, இந்துமதத் துரோகிகளாக, விரோதிகளாக விளங்கிய காங்கிரசு கட்சியின் தலைவர் முதல் தொண்டர் வரை புரிந்து கொள்ளும் வண்ணம் பெரிய பெரிய போராட்டங்களை நிகழ்த்தியவர்கள்:- கண்டபப்க் கோட்டை மு. சத்திவேல் பிள்ளை, முடிகணம் சு. கருப்பண்ணப் பிள்ளை, கரூர் பெரும்புலவர் மருதையா பிள்ளை (இந்த மூவரும் சித்தர் காக்கையர் எனும் காகபுசுண்டர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்), திண்டுக்கல் சந்திரசேகரன் பிள்ளை, பெரியகுளம் முத்துவேல் பிள்ளை, முடிகணம் எனும் முடிகண்ட சோழபுரம் (கரூர் அருகில் உள்ளது) பெ. சங்கரலிங்கம் பிள்ளை, திண்டுக்கல் து. சுப்பையா பிள்ளை, கரூர் ஆ. மாரியப்ப பிள்ளை, மோகனூர் சு.பா. உருத்திரம் பிள்ளை (இவர்கள் அறுவரும் கருவூரர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்).

இந்த ஒன்பது பேர்களும் பலமுறை மகாத்மா காந்தியைச் சந்தித்து, "இந்து மதத்திற்கு கேடு வரும்படி நீங்கள் செயல்படுவது தவறு; அரசியலில் இலாபம் கருதி நீங்கள் இந்து மதத்தை மாற்று மதத்திற்கு பலியாக்குகிறீர்கள், பலி கொடுக்கிறீர்கள்; எந்த ஓர் உண்மையான இந்துவும் உங்களை மதிக்க மாட்டான் வருங்காலத்தில். அதாவது, நீங்கள் விரும்புகின்ற இந்திய விடுதலை கிடைத்து ஒரு நூற்றாண்டு காலத்திற்குப் பிறகு வரலாறு திரும்பும். நீங்கள் இந்து மதத்தை பலிகடாவாக்கி இந்துக்களை கோடிக்கணக்கில் பலி கொடுத்து இந்தியாவுக்கு சுதந்திரம் வாங்கினீர்கள் என்ற வரலாறு வெட்டவெளிச்சமாக தெரிந்திடும். அப்பொழுது உங்களது வரலாறு வேறு விதமாக எழுதப்படும். அதன்பிறகு உலகமே எதிர்பார்க்காத அளவிற்கு உங்களை எதிர்த்து கருத்துப் புரட்சியும், செயல் புரட்சியும் நிகழும்."

"எண்ணற்ற இந்துக்களை அதாவது கோடிக்கணக்கான இந்துக்களை பலி கொடுத்து நீங்கள் வாங்கப் போகின்ற சுதந்திரம் மிக

விரைவில் இருந்த இடம் தெரியாமல் போய் அன்னிய நாட்டார் ஆட்சிக்கு அடிமையாகிடும். ஏனென்றால் இந்து என்ற உண்மையையே நீங்கள் கொலை செய்கிறீர்கள். இந்து மதத்தை சீரழித்து அன்னிய மதங்களுக்கு ஆரத்தி எடுத்து, இந்துக்களின் பசுங்குருதியால், பச்சை இரத்தத்தால் வெற்றித் திலகம் இடுகிறீர்கள், வீர வாழ்த்து முழக்குகிறீர்கள். ஆனால், அப்பாவி இந்துக்களை தேச ஒற்றுமை என்ற பெயரால் ஏமாற்றுகிறீர்கள்."

"நான்கு உகங்களாக இருந்து வரும் இந்து வேதமும், இந்து மதமும் உங்களுடைய அரசியல் வெற்றிக்காக நீங்கள் செய்யக் கூடிய தவறான செயல்களால் அழிந்து விடாது!. இந்தியாவைக் காப்போம் என்று சொல்லுகிறீர்கள். ஆனால், இந்தியாவின் ஒற்றுமையையும், வெற்றியையும் ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்துவேத அடிப்படையில்தான் உருவாக்க முடியும். இந்துவேத அடிப்படையில்தான் இந்துமத விழிச்சியையும், எழிச்சியையும் உருவாக்க முடியும். அப்படி எழிச்சி பெறுகின்ற இந்துக்களுக்கு முறையான பயிற்சி கொடுத்திட்டால் அவர்களே இந்திய விடுதலைக்குரிய முயற்சிகளை செய்திடுவார்கள். ஆனால், நீங்களோ! அன்னிய மதத்தவர்களை ஊக்குவித்து இந்துக்களுக்கு 'அடங்கிப் போ! ஒடுங்கிப் போ!' என்று போதிக்கிறீர்கள்."

"வானுயர்ந்த கோபுரங்களை உடைய இந்துமதக் கோயில்கள் இமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரிக் கடலடி மணற்பரப்பு வரை நிமிர்ந்து நிற்கும் வரை உங்களைப் போன்று ஆயிரமாயிரம் காந்திகள் தோன்றினாலும் இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் அழித்தாலும், இந்துக்களை ஏமாற்றி அடக்கி ஒடுக்கினாலும் இந்துவேதமும், இந்துமதமும் இந்த உலகம் உள்ள வரை இருந்தே தீரும். இவற்றிற்கு கேடு செய்து வரும் உங்களுடைய போதனைகளும், சாதனைகளும் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். நாங்கள்

இன்றைக்குக் கொடுக்கின்ற முழக்கம் “இந்து வேதம் வளர்ப்போம்! இந்துக்களை ஒற்றுமைப்படுத்துவோம்! இந்தியாவைப் பாதுகாப்போம்!” என்பதுதான். இன்றைய எங்களுடைய முழக்கங்கள் கடலலைகள் போல் என்றென்றும் முழங்கிக் கொண்டேயிருக்கும்.”

“என்றுவது ஒருநாள் புயலால் கடலலைகள் சீறி எழுவது போல் இந்துக்கள் விழிச்சிப் பெறுவார்கள்! எழிச்சிப் பெறுவார்கள். அப்பொழுது மனுநீதி நூல்களையும், நான்கு வேதங்களையும், 396 இந்துவேத நூல்களையும், 36 இந்துமத நூல்களையும், 4,42,368 சூலகங்களையும் இம்மண்ணுலகுக்கு வழங்கிட்ட சிவபெருமான்களின் நேரடி வாரிசான சித்தர்கள் தமிழகத்தில் தோன்றிக் கொண்டேதான் இருப்பார்கள். அவர்கள் நாங்கள் முழக்கிய முழக்கங்களை முழக்கும் போது முதலில் தமிழர்கள் தாங்களும் இந்துக்கள்தான்; தங்களுடைய தமிழ்மொழியில்தான் அனாதிசிவன்கள் மனுநீதி நூல்களையும், ஆதிசிவன் மேலே கூறிய நான்கு வேதங்களையும், 396 இந்துவேத நூல்களையும், 36 இந்துமத நூல்களையும், 4,42,368 சூலகங்களையும் அருளினார்கள்; தமிழ்மொழிதான் அண்டபேரண்டங்களின் ஆட்சிமொழி, தமிழ்மொழிதான் கடவுளர்களின் மொழி, தமிழ்மொழிதான் தேவர் தேவதைகளின் மொழி, தமிழ்மொழிதான் தெய்வங்களின் மொழி, தமிழ்மொழிதான் ஆண்டவர்களின் மொழி, தமிழ்மொழிதான் மனிதர்கள் கடவுளைச் சந்திக்கின்ற மொழி, தமிழ்மொழிதான் மனிதர்களை கடவுளாக மாற்றுகின்ற மொழி தமிழ்மொழி ஒன்றுதான் என்பனவற்றை உணர்வார்கள்” என்று தெளிவாக மகாத்மா காந்தி அவர்களிடம் விளக்கி உரைத்தார்கள்.

(18) இன்றைக்கு 1995க்கு முன்பு 38,87,176 ஆண்டுகளுக்கு முன்பே ஆதிசிவனார் மருத மரங்கள் நிறைந்த காட்டில் (இந்தக் காடு தென் இமயமலையின் அடிவாரத்தில் இருந்தது. இதற்குச் சில ஆயிரம் கல் தொலைவில் கிழக்கிலும், மேற்கிலும்; கிழக்கு இமயமலையும், மேற்கு இமயமலையும் இருந்தன. இப்படி மூன்று பக்கமும் வானளாவிய

(பனி சிகரங்களையுடைய) மலைமுகடுகளையுடைய மூன்று இமயமலைகள் இருந்திட இவற்றின் நடுவேதான் முக்கோண வடிவம் உடைய தீவு ஒன்றை திருவிடமாக (திரு + இடம் = அருளாளர்கள், கடவுளர்கள் தங்கும் இடம் = திராவிடம் => இங்கு வாழும் அருளாளர்கள் அனைவரும் திராவிடர்கள் = திராவிடர் என்றால் ஆத்திக பெருமக்கள், தமிழ்மொழியில் தமிழர்கள் என்று பொருள்) அறிவித்தார். இங்குதான் முதலில் அருளூறு அமுதத் தெய்வீகச் செம்மொழியான முத்தமிழ் மொழியை கற்பிக்கவும், மனுநீதி நூல்கள், இந்து மத நூல்கள், இந்து வேத நூல்கள், சுலோகங்கள் எனும் சூலகங்கள் முதலியவற்றையெல்லாம் இந்த உலகம் என்று சொல்லப்படுகின்ற ஏழாயிரம் கல் அளவு நீண்டு விரிந்து கிடந்த இளமுறியாக் கண்டம் எனும் குமரிக் கண்டத்தில் இருந்திட்ட 800 மொழிகளிலும் மொழிபெயர்க்கும் பணிகளும் நடந்தன. அதாவது, ஆதிசிவனார்தான் அனாதிகால மனுநீதியார் எனும் அனாதி சிவபெருமான்கள் எழுதிய மேலே குறிப்பிட்ட மனுநீதி நூல்களையும், ஆதிசிவபெருமான்கள் குறிப்பிட்ட இந்துவேத இந்துமத நூல்களையும் இளமுறியாக் கண்டத்தில் உள்ள 800 மொழியினர்களையும் வரவழைத்து மொழிபெயர்ப்புப் பணியைச் செய்தார்.

இத்துடன், இளமுறியாக் கண்டத்தில் உள்ள 800 மொழியில் சிறுவர்களைக் கொண்டு வந்து தமிழ்மொழியை முறையாக கற்பிக்கும் கல்விச்சாலையை நிறுவினார். இந்த பணிகளுக்காக அண்டபேரண்டங்களில் இருந்து தம்மோடு வந்த 48 சித்தர்கள் குழுவில் இருந்த பெண்பால் சித்தர்கள் ஏழு பேர்களைப் பொறுப்பாக நியமித்தார். அவர்கள் முறையே கல்வி நிலையத் தலைவி ஔவையார் (வயது 35), இணை தலைவிகள் இருவர் சிரசுவதி (சரசுவதி வயது 27), இலக்குமி (வயது 30); இவர்களுக்குக் கீழ் நான்கு செயலாளர்கள் காளிதேவி (வயது 23), மாரிதேவி (வயது 22), காமாட்சி தேவி (வயது 24),

பகலவதி தேவி (வயது 20). இப்படி ஏழு பேர்களை நியமித்து முத்தமிழ் மொழியை கற்பிக்கும் பணியும், இளமுறியாக் கண்டத்தில் உள்ள 800 மொழிகளிலும் அனாதிசிவன்களும், ஆதிசிவன்களும் அருளியதை மொழிபெயர்க்கும் பணியும் நிகழ்ந்திட்டன.

(19) இப்படி திருவிடத்தில் தமிழ் கற்றவர்களும்; திருவிடத்திலிருந்து இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் கற்றவர்களும்; திருவிடத்திலிருந்து தமிழ்மொழியில் இந்துவேதத்தையும், இந்துமதத்தையும் பரப்புவதற்காக புறப்பட்டவர்களும் 'திருவிடத்தார்கள்' => திராவிடர்கள் எனப்பட்டார்கள். அதாவது திராவிடர்கள்தான் தமிழர்கள்; தமிழர்கள்தான் திராவிடர்கள். எனவேதான், இந்துவேதமும், இந்துமதமும் 'திராவிடர் வேதம்', 'திராவிடர் மதம்' என்று அன்னியர்களால் அழைக்கப்பட்டது.

(20) இந்த நிலைகளுக்குப் பிறகு மூன்று முறை கடல் பொங்கி (கடல் கோள் நிகழ்ந்து) 7,000 கல் பரப்பளவு இருந்த குமரிக் கண்டம் சிறுகச் சிறுக கடலுக்குள் மூழ்கிற்று. இப்படிச் சிறுகச் சிறுக மூழ்கித்தான், இந்த குமரிக் கண்டத்தில் இருந்த தமிழர்கள் புதியதாகத் தோன்றிய அமெரிக்காக் கண்டம், ஆப்பிரிக்காக் கண்டம், ஐரோப்பாக் கண்டம், ஆசுத்திரேலியாக் கண்டம், ஆசியாக் கண்டம் என்ற கண்டங்கள் அனைத்துக்கும் சென்றார்கள். அதாவது, இன்றைக்கு ஐந்து கண்டங்களிலும் வாழுகின்ற மக்களில் 100க்கு 90 பங்கு அல்லது 75 பங்காவது குமரிக் கண்டத்தார்கள்; அதாவது திராவிடர்கள்தான் அதாவது தமிழர்கள்தான்.

(21) இன்றைக்கும், விஞ்ஞானப் பூர்வமாக தமிழ்நாட்டின் கல்லும், மண்ணும், மணலும்தான் இவ்வுலகில் முதலில் தோன்றியது என்பது மெய்ப்பிக்கப் பட்டுவிட்டது. இதேபோல் தென்னிந்தியாவில் வாழும் தமிழர்கள்தான், இம்மண்ணுலகத்தின் பூர்வீகக் குடிகள் (The People of the Kumari Continent are the aboriginates of this Universe. That is, the Dravidians or the Tamils are the aboriginates of

this Universe) என்று மிகமிகத் தெள்ளத் தெளிவாக மானுடவியல் வல்லார்களும், தொல்பொருள் இயல் ஆராய்ச்சியாளர்களும் (Anthropology and the Archeology) திட்டவட்டமாக முடிவுகட்டிச் சொல்லி விட்டார்கள். இதற்கு மேல் இன்னும் தமிழர்களுடைய தொன்மையைப் பற்றி கேலியும், கிண்டலும் பேசிக் கொண்டு இந்த உண்மையை நம்பாதவர்களாக தமிழர்களிலேயே நிறைய பேர்கள் இருப்பதுதான் வியப்பாக இருக்கிறது!? வேதனையாக இருக்கிறது!?

(22) இப்படியாக விஞ்ஞான உலகம், தமிழர்கள் எனும் திராவிடர்கள் எனும் குமரிக் கண்டத்து மக்கள்தான் இந்த உலகின் பூர்வீகக் குடிகள் என்று மெய்ப்பித்து விட்டார்கள். எனவே, ‘தமிழ்மொழியின் அடிப்படையில்தான் இந்த உலகில் உள்ள எல்லா மொழிகளும் தோன்றியிருக்கின்றன’ என்ற காரணத்தினால்; ‘தமிழ்மொழியில் உள்ள மனுநீதி நூல்கள் 18, இந்துவேதங்கள் 4, இந்துவேத நூல்கள் 396, இந்துமத நூல்கள் 36, இந்து வேத சூலகங்கள் 4,42,368 எனும் இவைகளின் அடிப்படையில்தான் இந்த உலகில் உள்ள எல்லா வேதங்களும், வேத மதங்களும், இவற்றிற்குரிய கோயில்களும் தோன்றின, தோற்றுவிக்கப்பட்டன; உண்டாயின, உண்டாக்கப்பட்டன; உருவாயின, உருவாக்கப்பட்டன.’

(23) இந்துவேதத்தில்தான் 8,84,736 வகைப்பட்ட கடவுள்களின் வகைகள், பெயர்கள் மிகமிகத் தெளிவாகத் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, இந்த மண்ணுலகில் எந்தக் கோடியில் என்ன பெயருடைய கடவுள்கள் இருந்தாலும் சரி, அவருடைய பெயர் இந்துவேதத்தில் குறிப்பிடப்படுகின்ற 8,84,736 வகைப்பட்ட கடவுள்களுக்குள் ஒருவராகத்தான் இருக்க முடியும். அதாவது, இந்த உலகியலில் உள்ள எல்லாக் கடவுள்களும், கடவுள்களை அடிப்படையாகக் கொண்டுள்ள வேதங்களும், வேத மதங்களும்; தமிழ்மொழியில் உள்ள இந்துவேத மதமான இந்துமதத்தின் ஒரு

கூறுகத்தான் அல்லது ஒரு பகுதியாகத்தான் இருக்க முடியும்! இருக்க முடியும்!! இருக்க முடியும்!!!

(24) எனவே, இந்த உலகில் உள்ள மொழிகள் எல்லாம் தமிழ்மொழியில் இருந்துதான் தோன்றியவை என்ற பேருண்மையையும்; இந்த உலகில் உள்ள வேதங்கள் எல்லாம் தமிழ்மொழியில் இருந்துதான் தோன்றியவை என்ற பேருண்மையையும்; தமிழ்மொழியில் உள்ள இந்துமதத்தில் இருந்துதான் இந்த உலகில் உள்ள எல்லா மதங்களும் தோன்றின என்ற பேருண்மையையும்; தமிழ்மொழியில் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ள 8,84,736 வகைப்பட்ட கடவுள்களுக்கு உட்பட்ட கடவுள்களே இந்த உலகில் ஆங்காங்கே நேரில் தோன்றியும், தனது வாரிசுகளை அனுப்பியும், தமது தூதுவர்களை அனுப்பியும், வேதங்களையும், வேத மதங்களையும் தோற்றுவித்திட்டார்கள் என்ற பேருண்மையையும் உலகத்திற்கு மீண்டும் நினைவுபடுத்தப்பட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையாகக் கொண்டுதான் இந்துவேத முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றது.

(25) அதாவது, இன்றைக்கு உலகியலில் உள்ள

- மொழிப் போர், மொழி ஆக்கிரமிப்பு
- இனப் போர், இன ஆக்கிரமிப்பு, இனச் சண்டை
- சாதிப் போர், சாதிச் சண்டை, சாதி ஆக்கிரமிப்பு
- மத மாற்றம், மதப் போர்
- நாடு பிடிக்கும் உலகப் போர்
- தனிமனித பேராசை, வெறி, தன்னல வெறி, அகம்பாவ வெறி, ஆணவ வெறி, பண வெறி, பதவி வெறி, ..... முதலிய வெறிகளால் விளையக்கூடிய போட்டி பொறாமை, சண்டைச் சச்சரவு, கலகங்கள் ... ...

முதலிய அனைத்தையும் தடுத்து நிறுத்தி, நீக்கி, அகற்றிடப் பாடுபட இமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரி கடலடி மணற்பரப்பு

வரையுள்ள இந்துக்களை ஒன்றுதிரட்டிட, பாடுபடுவதற்காகத்தான் இ.மு.க. தோற்றுவிக்கப் பட்டிருக்கின்றது. இந்தத் தகுதி, இந்தத் தரம், இந்தத் திறம், இந்தத் திரம், இந்த உரம், இந்த அறம், இந்த மறம், ..... இந்த உலகிலேயே இ.மு.க. ஒன்றுக்குத்தான் உண்டு! இ.மு.க. ஒன்றுக்குத்தான் உண்டு!! இ.மு.க. ஒன்றுக்குத்தான் உண்டு!!! அதாவது இந்த உலகில் சமாதானமும், சமத்துவமும், சகோதரத் தத்துவமும், ஒற்றுமையும், அமைதியும், நிம்மதியும், நிறைவும், மனிதத் தத்துவமும், மானுட அன்பும், மானுட பற்றும் பாசமும், மனித நேயமும், ...... உருவாக்கப்பட வேண்டும் அல்லது உருவாக்கப் பட்டிடல் வேண்டும் என்ருல்; நான்கு உக நாயகம், ஆதிசிவனுரின் திருத்தோன்றல், இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை, குவலய குருபீடம், ஞாலகுரு, குருமகா சன்னிதானம், சித்தர் அரசயோகிக் கருவூரர், அந்தணர் அண்ணல், ஞாஞச்சாரியார் அவர்கள் தோற்றுவித்துள்ள இ.மு.க.விஞல்தான் முடியும்! இ.மு.க.விஞல்தான் முடியும்!! இ.மு.க.விஞல்தான் முடியும்!!!

(26) இவற்ருல்தான் இந்து வேத மத மூலவர்களாகவும், காவலர்களாகவும், தலைவர்களாகவும், தத்துவ வித்துக்களாகவும், வாரிசுகளாகவும், சொத்துக்களாகவும் இருக்கின்ற உலகத் தமிழர்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி, ஒற்றுமைப்படுத்துதல் வேண்டும் என்ற முயற்சியினை பதினெண்சித்தர் மடத்தில் பயிற்சி பெற்ற 48 வகைப்பட்ட அருட்பட்டங்களைப் பெற்ற சித்தர்களை தமிழ்நாடு முழுவதும் அனுப்பி இ.மு.க.வின் சீவலிங்கக் கொடியான மெய்ஞ்ஞானக்கொடியை பறக்க விட்டும், அக்கொடி மரத்தினடியிலேயே விளக்கு மாடம் கட்டி விளக்கு எரிய விட்டும், மூவிலை சூலம் நட்டு ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீக சத்திகளை மக்களுக்கு வழங்கி எல்லாவிதமான பாதிப்புகளில் இருந்தும் விடுபட்டு இ.மு.க.வில் உறுப்பினர்களாகும்படி செய்யக் கூடிய அ.வி.தி. (அருட்பணி விரிவாக்கத் திட்டம்) உருவாக்கப்

பட்டிருக்கின்றது. உடனடியாகத் தமிழர்கள் அனைவரும் சாதி மத வேற்றுமைகளை எல்லாம் விட்டுவிட்டு இ.மு.க.வில் உறுப்பினர்களாகச் சேர்ந்திடல் வேண்டும்.

(27) அதாவது, தனிமனித வீடுகளிலும், தெருமுனைகளிலும், பொது இடங்களிலும், எல்லாவகைப்பட்ட கோயில்களிலும் இ.மு.க.வின் சீவலிங்கக் கொடியான மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றப்பட்டாக வேண்டும். அதனடியில் விளக்கு மாடம் கட்டப்பட்டு அன்றாடம் மாலையில் விளக்கு ஏற்றப்பட வேண்டும். அதன் அருகில் திரிசூலம் நட்டு அத் திரிசூலத்திற்கு எண்ணெய் பூசி திருநீறு, சந்தனம், குங்குமம் ஆகியவை பூசப்பட்டு மலர்ச் சரம் (பூச்சரம்) அணிவித்து வழிபாடு செய்திடல் வேண்டும். அது போதும்! அது போதும்!! அது போதும்!!!

(28) இந்த அறிவிப்பு அருளாணை பெற்ற குருவாணையாக அறிவிக்கப்படுகிறது. இந்த நாட்டில் இனிமேல் அரசியல் கட்சி என்றோ, அரசியல் கழகம் என்றோ, அரசியல் இயக்கம் என்றோ எந்தவொரு நிறுவன நிர்வாகமும் இருக்கக் கூடாது, இருக்கவும் முடியாது! ஏனெனில் <u>யாரிடமாவது தமிழர்களை ஒற்றுமைப்படுத்தச் செயல்திட்டம் இருக்கிறதா? அல்லது தமிழர்கள் ஏன் ஒற்றுமையாக இல்லை என்ற வினாவுக்குரிய விடை இருக்கிறதா?</u>

இந்துக்களை ஒற்றுமைப்படுத்தும் செயல்திட்டம் யாரிடமாவது இருக்கிறதா? அல்லது இந்துக்கள் ஏன் ஒற்றுமையாக இல்லை என்ற வினாவுக்குரிய விடை இருக்கிறதா?

இதுவரை எந்த நிறுவனமாவது இந்துமத வரலாற்றை, இந்துவேத வரலாற்றை, இந்துமத வாழ்வியல் நடைமுறைகளை; இந்து சாத்தர சாத்திர சாத்திற சடங்குகளை, பழக்கவழக்க நடைமுறைகளை விளக்கியிருக்கிறார்களா?

(29) "இந்துக்களே இந்துக்களாக வாழக் கற்றுக் கொள்ளுங்கள்". அதாவது;

√ இந்துக்களாக இருப்பவர்கள் கட்டாயம் ஆண்டுக்கு ஒருமுறை வருடப் பிறப்பு நாளன்று புதிய ஒற்றை உருத்திராக்கம் கழுத்தில் அணிந்து கொள்ள வேண்டும். வசதி வாய்ப்பிற்கேற்ப பழைய ஒற்றை உருத்திராக்கத்தை கழற்றி குளத்திலோ, ஆற்றிலோ அல்லது கடலிலோ போட்டுவிட வேண்டும்.

√ இந்துக்களாக இருப்பவர்கள் கட்டாயம் மாதமொரு முறை அமாவாசை நாளிலோ அல்லது முழுநிலவு (பௌர்ணமி) நாளிலோ புதிய பூணூல் அணிந்து கொள்ள வேண்டும். வசதி வாய்ப்பிற்கேற்ப பழைய பூணூலை கழற்றி குளத்திலோ, ஆற்றிலோ அல்லது கடலிலோ போட்டுவிட வேண்டும்.

√ இந்துக்களாக இருப்பவர்கள் கட்டாயம் மாதமிருமுறை அமாவாசை நாளிலும், முழுநிலவு நாளிலும் புதிய 'காப்பு கங்கணக் கயிறு" கட்டிக் கொள்ளவேண்டும். (ஆண்கள் வலது மணிக்கட்டிலும், பெண்கள் இடது மணிக்கட்டிலும்). வசதி வாய்ப்பிற்கேற்ப பழைய காப்பு கங்கணக் கயிறை கழற்றி குளத்திலோ, ஆற்றிலோ அல்லது கடலிலோ போட்டுவிட வேண்டும்.

√ இந்துக்களாக இருப்பவர்கள் கட்டாயம் வாரமொரு முறையாவது அவரவர் வசதி வாய்ப்புகளுக்கேற்ப ஏதாவது ஒரு கோயிலுக்குச் சென்று அருட்சினை செய்து பூசை செய்து வர வேண்டும்.

√ இந்துக்களாக இருப்பவர்கள் அன்றாடம் காலை மாலை உடலை சுத்தம் செய்து கொண்டு திருநீறு, குங்குமம், மஞ்சள், சந்தனம், சாந்து, திருமண், .... முதலியவற்றில் தங்களுக்கு விருப்பமானதை அணிந்து கொள்ள வேண்டும்.

√ ஒவ்வொரு இந்துவின் குடும்பத்திலும் அக்குடும்பத்தில் உள்ள யாராவது ஒருவர், அன்றாடம் மாலையில் பூசைக்குரிய இடத்தில் விளக்கேற்றி காயந்திரி மந்தரத்தை 48 முதல் 108 முறைகள் வரை ஓதி வரவேண்டும்.

இந்த ஆறு கடமைகளை இந்துக்கள் நிறைவேற்றுவதின் மூலம்தான்:-

1. இந்துக்கள் தங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள அனைத்து வகையான பாதிப்புக்களையும் அகற்றிக் கொள்ள வேண்டும்.

2. இந்துக் கோயில்கள் அனைத்தையும், முழுமையாக இந்துக்களுக்குப் பயன்படும்படி செய்திட முடியும்.

3. இந்துக்கள் மாற்று மதக் கோயில்களுக்கும், மாற்று மதத்தவர்களிடமும் சென்று மந்திரித்துக் கொள்வதையும், முடிகயிறு குளிசம் சக்கரம் பெற்றுக் கொள்வதையும் மாற்ற முடியும்.

(30) இப்படி இந்துக்களை இந்துக்களாக ஆக்கினால்தான்; இந்துவாக இருக்கின்றவன்; தான் ஓர் இந்து, இந்தியன் என்ற நம்பிக்கையையும், நாட்டுப்பற்றையும் பெற்றிடுவான். அதாவது, இந்தியாவில் உள்ள இந்துக்கள் அனைவரும் இந்தியர்கள் என்ற உணர்வு பெறும்படி செய்ய வேண்டும். அப்பொழுதுதான், இந்தியர்களிடையே ஒற்றுமையும், ஒருமைப்பாடும் ஓங்கும். இதற்கு தமிழ்மொழியை, அருளாட்சி மொழியாகக் கொண்டு வர வேண்டும். தமிழ்மொழியில் உள்ள நான்கு வேதங்கள்தான் இந்தியா முழுவதும் ஓதப்பட வேண்டும். தமிழ்மொழியில் உள்ள காயந்திரி மந்தரம், காயந்திரி மந்திரம், காயந்திரி மந்திறம், காயந்திரி மாந்தரம், காயந்திரி மாந்தரீகம் அனைத்தும் முறையாகவும் நிறைவாகவும் எல்லா கடவுள் சன்னிதானங்களிலும் ஓதினால்தான்! அன்னிய நாட்டு மந்திரவாதிகளால் நமது கோயில்களுக்கும், நமது மக்களுக்கும் ஏற்பட்டுள்ள எல்லாவிதமான பாதிப்புகளும், மாயைகளும், தேக்கங்களும், முடக்கங்களும் நீக்கப்பட்டிடும்! நீக்கப்பட்டிடும்!! நீக்கப்பட்டிடும்!!!

(31) முதலில் இந்திய நாட்டில் உள்ள அன்னிய நாட்டு மதத்தினர் அனைவரும் தங்கள் தங்களின் மதத்திற்குரிய அல்லது தங்கள் தங்களின் மதம் பிறந்த நாட்டையே தங்களுடைய தாய்நாடாகவும்; அந்த அன்னிய நாட்டைச் சேர்ந்த மக்களையே சொந்தக்காரர்களாக அதாவது உறவுக்காரர்களாக நினைப்பது மாற வேண்டும் அல்லது

மாற்றப்பட வேண்டும். அதாவது நம் நாட்டில் உள்ள மாற்று மதத்தவர்கள் அன்னிய நாடுகளுக்குரிய மதத்தவர்களாகவே இருக்கிறார்கள். எனவேதான், அன்னிய மதத்தைச் சேர்ந்த நம் நாட்டவர்கள் தங்களை அன்னியர்களாகவே நினைத்துக் கொண்டு வாழுகிறார்கள். அவர்கள் தங்களை இந்தியர்களாக நினைப்பதில்லை. ஆனால், இந்திய அரசாங்கமோ அன்னிய மதத்தவர்களுக்கு ஏராளமான சலுகைகள் தருகின்றன. அதாவது (minority people) குறைந்த எண்ணிக்கையுடைய மக்கள் என்று சொல்லி அவர்களுக்கென்று அதிகச் சலுகைகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இந்தியாவில் பிறந்த இந்துக்களுக்கு சலுகை கிடையாது! இப்படிப்பட்ட கருத்தையுடைய கட்சிகள் தேவையா? இப்படிப்பட்ட கட்சிகளுடன் கூட்டு வைத்துக் கொண்டிருக்கும் கட்சிகள் தேவையா?! இவற்றிற்கு ஒரு முடிவு வேண்டாமா!? இந்துக்களுக்கு நீதி தேவை. இந்துக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தடுத்தேயாக வேண்டும். இந்துக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளையும், கொடுமைகளையும் தடுத்து நிறுத்துவதற்காகத்தான் "இ.மு.க. அரசியல் கட்சியாக ஆக்கப்பட்டுள்ளது".

(32) அதாவது 40 ஆண்டுக் காலத்திற்கு மேலாக, இ.மு.க. என்ன செய்து கொண்டிருந்தது தெரியுமா? இந்தியாவின் மூலை முடுக்குகளில் எல்லாம் கோயில்கள் தோறும் ஓமங்கள், ஓகங்கள், யாகங்கள், யக்ஞங்கள், வேள்விகள் செய்து கொண்டிருந்தது. இந்து தருமத்தை நிலைநாட்ட வேத விளக்கவுரைகளையும், வேதம் ஓதுதல்களையும், வேத பாடசாலைகளையும் நிகழ்த்திக் கொண்டிருந்தது. கோயில்கள் தோறும் சக்கரங்கள் வைத்து கோயில்களை புதுப்பித்துக் கொண்டிருந்தது. இந்துக்களுக்கு பூணூல் போட்டுவிட்டும், உருத்திராக்கம் கட்டிவிட்டும், கங்கணக் கயிறு கட்டிவிட்டும், மந்திரித்தும் பூசைக்கு சக்கரங்கள் கொடுத்தும், குளிசங்கள் கொடுத்தும் அருட்பணிகள் செய்து கொண்டிருந்தது. இன்றைக்கு அரசியலில் உள்ள அனைத்துக் கட்சிகளும் இந்துமத விரோதிகளாக, துரோகிகளாகத்தான் இருக்கிறார்கள்

என்பதைத் தெரிந்து கொண்டதினால்தான் அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், தம்முடைய கையில் உள்ள கற்பூரத் தட்டையும், பூசைமணியையும் கீழே வைத்துவிட்டு, பேனாவையும் காகிதத்தையும் கையில் எடுத்திருக்கிறார். சமய சமுதாயக் கட்சியாக நான்கு உகமாக இருந்திட்ட (இ.மு.க.) இந்துவேத முன்னேற்றக் கழகத்தை அரசியல் கட்சியாக! அரசியல் இயக்கமாக! அரசியல் கழகமாக மாற்றியிருக்கிறார். அவருடைய இலட்சக்கணக்கான பத்தர்களும், தொண்டர்களும் தெருக்கள் தோறும் இ.மு.க.வின் கிளை அலுவலகங்களை திறந்து கொண்டிருக்கிறார்கள். அரசியல் கழகமாக! கோயில்களிலும், கோயில் தேர்த் திருவிழாக்களிலும் இ.மு.க.வின் சீவலிங்கக் கொடியை, மெய்ஞ்ஞானக் கொடியை பறக்கவிடப்பட்டு ஞான உலா நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

இந்துக்கள் எல்லோரும் 'வெற்றி வேல்! வீரவேல்!' என்று முழக்கமிட்டபடிக் கிளம்பி விட்டார்கள். இ.மு.க.வின் கொடி ஏற்றியாகி விட்டது. இ.மு.க.வின் கொடியான மெய்ஞ்ஞானக்கொடி விரைவில் சென்னை கோட்டை வாசலில் பறக்கும். மிக விரைவில் டில்லி செங்கோட்டையில் சீவலிங்கக் கொடியான மெய்ஞ்ஞானக்கொடி பறக்கும். அருளாட்சிக்கு அழைப்பு **விடுக்கிறோம்.**

25-8-1995

**அருளாணை பெற்ற குருவாணை.**

**அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்.**

**//உண்மை நகல்//**
**//மூலம்: சித்தரடியான் திரு சீ.மணி அவர்களின் கையெழுத்தில் இருந்திட்ட நகல். இறுதியில் குருதேவர் அவர்களின் கையெழுத்து இருந்தது.//**

17-07-1994.

# சேலம் பயணத்தில் விடுதியில் குருதேவர் கூறியது.

1) **அரசியல் கட்சியின் தகுதி:-**

ஒரு தலைவன் அல்லது கொள்கை இருந்தால்தான் வளர முடியும்.
*உதாரணம்:*

♦ 'பார்ப்பானை ஒழிப்பேன்' என்று கூறியதால் பெரியார் கட்சியும்,

♦ 'தமிழை பாதுகாப்பேன்! வளர்ப்பேன்! வடநாட்டை ஒழிப்பேன்!;' என்று கூறியதால் தி.மு.க.வும் வளர்ந்தன.

♦ 'விடுதலை பெற்றுத் தருவேன்' என்று கூறியதால் காந்தி வளர்ந்தார்.

2) **தலைவன்:-**

♦ அரசியலே தெரியாத எம்.சி.ஆர். (M.G.R.), கொள்கையேயில்லாத செயலலிதா அரசியலில் வெற்றி பெற்றுர்கள்.

♦ இந்திரா காந்தி 'நேருவின் மகள்' என்பதற்காகவும், இராசீவ் காந்தி 'இந்திராவின் மகன்' என்பதற்காகவும் வளர்ந்தனர்.

3) **புதிய கட்சி தோன்றுவது:-**

ஒரு அரசியல் கட்சியிலிருந்து, மற்றொரு அரசியல் கட்சி பிரிந்தால்தான் வாழ முடியும். ஏனெனில், பழைய அரசியல் கட்சியிலிருந்தவன்தான் இதில் இருப்பான். எனவே, புதிதாக தோற்றுவிக்கப்படக் கூடிய கட்சியில்தான் கொள்கையும், குறிக்கோளும் வெற்றி பெறும்.

4) **தமிழ்நாட்டின் நிலைமை:-**

♦ தமிழ்நாட்டில் தமிழ் காப்பாற்றப்படவில்லை.

♦ தமிழர்களுடைய உரிமையோ, பெருமையோ வரலாற்றுப் பூர்வமாக நிலைநாட்டப்பட வில்லை.

♦ தமிழ்நாட்டின் வரலாற்றை இதுவரை யாரும் தெளிவாகக் கூறவில்லை.

♦ தமிழர்களுக்கிடையில் ஒற்றுமையில்லை.

♦ தமிழர்களை ஒற்றுமைப்படுத்தக் கூடிய கொள்கையோ, குறிக்கோளோ, செயல்திட்டமோ இதுவரை தரப்படவில்லை; தருவதற்காக முயற்சிக்கக் கூடிய தலைவரோ அல்லது தலைமையோ இல்லை.

♦ தமிழர்கள் எல்லோருமே தங்களுடைய இனத்தைச் சேர்ந்த தமிழர்களைத் தவிர மற்றவர்களை மதிக்கிறார்கள்.

♦ தமிழர்கள் அனைவருமே தமிழைத் தவிர மற்ற மொழிகளைத்தான் உயர்வாக மதிக்கிறார்கள்,

♦ எல்லா வளங்களையும், வற்றாத வளங்களாகப் பெற்றிருக்கக் கூடிய தமிழ்நாட்டில் தங்களால் வாழ முடியாது; பணம் சம்பாதிக்க முடியாது; வேற்று மாநிலங்களுக்கும், வேற்று நாடுகளுக்கும்தான் செல்ல வேண்டும் என்று முடிவுகட்டி விட்டார்கள் ஏறத்தாழ எல்லாத் தமிழர்களும்.

♦ தமிழர்கள் தனிப்பட்ட முறையிலும், வணிகத் தொழில் நிறுவனங்களின் நிலையிலும், அரசியல் நிலையிலும் வேற்று மாநிலத்தவர்களும், வேற்று நாட்டவர்களும்தான் எந்த வியாபாரத்தையும், எந்தத் தொழிலையும், எந்த ஒப்பந்தத்தையும் சிறப்பாகச் செய்ய முடியும் என்று நம்புகிறார்கள்.

♦ மக்களிடம் வேற்று மொழி இலக்கியங்கள்தான் சிறந்தவை, வேற்று மொழி திரைப்படங்கள்தான் சிறந்தவை; வேற்று மொழிக் கலைஞர்கள்தான் கலையியல் வல்லுநர்கள்; வேற்று இனத்தவர்கள்தான்,

மொழியினர்கள்தான் அழகுடையவர்கள்; வேற்று இனத்தவர்கள்தான், வேற்று நாட்டவர்கள்தான் அறிவுடையவர்கள் என்று நம்புகிறார்கள்.

♦ இதுவரை தமிழர்களை ஒற்றுமைப்படுத்துவதற்கு என்ற கொள்கையோடு எந்தவொரு அரசியல் கட்சியும் இல்லை, தோற்றுவிக்கப்பட்டதில்லை. இ.மு.க.தான் அதைச் சொல்கிறது.

♦ தமிழர்களே, 'தமிழன்' என்றோர் இனம் கிடையாது! எல்லா இனமும் கலந்துவிட்டது. எனவே இப்போது 'தமிழன்', 'தமிழன்' என்று சொல்வதில் அர்த்தமில்லை. அப்படியே சொன்னாலும் தமிழனுக்கு மட்டும் என்ன சிறப்பிருக்கிறது? என்று கேட்கின்றார்கள்.

5) இவற்றிற்கான பதில்களை இ.மு.க. ஒன்றுதான் இந்துவேதத்தின் மூலம் 'தமிழனுக்கென்று என்னென்ன சிறப்புக்கள் உள்ளன' என்பதை மெய்ப்பிக்கின்றது. அவற்றுள் சில சிறப்புக்கள்:-

√ கடவுள்களில் அநேகமாக அதிகமாக தமிழர்களே இருக்கிறார்கள். அல்லது தமிழர்களே கடவுளர்களாக இருக்கிறார்கள்.

*__உதாரணம்:-__* தமிழிலுள்ள இந்துவேதத்தில்தான் 8,84,736 வகைக் கடவுள்கள் இருக்கிறார்கள். அனைவரும் தமிழர்களே!

√ தமிழர்களில் கடவுளர்களாகவே மாறியவர்கள், மாறிக் கொண்டிருப்பவர்கள், கடவுளர்களாகவே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் கணக்கற்றோர் இருக்கிறார்கள்.

*__உதாரணம்__*:- உலகிலேயே கடவுள் நேராக வந்து அருள் தந்து கடவுள்களாக ஆக்கியவர்கள் 64 பேர்கள் (சிவபெருமான்கள்).

√ கடவுளர்களைக் கண்டு கடவுளர்களாகவே மாறியவர்கள் 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள், 96 தொகையடியார்கள், அருணகிரியார், பட்டினத்தார், பத்திரகிரியார், தாயுமானவர், இராமலிங்க அடிகளார், இலைமறைகாயாக வாழும் 48 வகைச் சித்தர்கள்.

√ இவற்றிற்கெல்லாம் அடிப்படை; மனிதரைக் கடவுளாக்கும் 'காயந்திரி மந்திரம்' என்ற ஒன்று எல்லா மானுடர்களுக்கும்

வழங்கப்பட்டிருக்கிறது; வெளியிடப்படாத 23 வகைக் காயந்திரிகளும், வெளியிடப்பட்டுள்ள மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழிகளும் உள்ளன.

எனவே, தமிழனுக்கும், தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்துக்கும், தமிழ்நாட்டுக்கும் தனித்தன்மை உண்டு, தனிச்சிறப்பு உண்டு, தனிப்பெருமை உண்டு, தனியுரிமை உண்டு. வேறெந்த மொழிக்கோ, இனத்துக்கோ, நாட்டுக்கோ இந்த உரிமை கிடையாது! கிடையாது!! கிடையாது!!! கிடையவே கிடையாது.

6) இந்த உண்மை (இன்றைக்கு 1995ஆம் ஆண்டுக் கணக்கின்படி) 43,73,095 ஆண்டுகளுக்கு முன்னுலேயே ஆதிசிவனுர் இந்துவேதத்தில் இம்மண்ணுலகில் இருந்திட்ட 800 வகைக்கும் மேற்பட்ட இனத்தவர்களுக்கும் இல்லாத உரிமையும், பெருமையும் உடைய ஓர் இனமாக உருவாக்கப்பட்ட இனமே தமிழினம் என்பதினுல் உறுதியாகின்றது. அதாவது, 800 வகைப்பட்ட இனத்தவர்களிலிருந்தும் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, தமிழ் கற்றுக் கொடுத்து தமிழர்களாக்கினுர்கள். அதாவது, ஆதிசிவனுரிடம் தமிழ் கற்று, தீட்சை பெற்று, வேதம் பயின்று இந்து மதத்திற்குரிய அருளுலகப் பத்திநிலைகள், சத்திநிலைகள், சித்திநிலைகள், முத்திநிலைகள் ஆகிய நான்கையும் கற்றுத் தேர்ந்தவர்களே ‘தமிழர்கள்’. அப்படிக் கற்றுத் தேருதவர்கள் ‘தமிழர்களல்லர்’ என்று ஆதிசிவனுராலேயே ஒதுக்கப்பட்டு விட்டார்கள். இன்றைக்கு தமிழ்மொழியைக் கற்றவர்கள் எல்லோரும் தமிழர்கள்தான்.

7) தமிழினத்தோடு திருமணத் தொடர்பு மூலம் கலந்து கொண்டாலும் அவர்கள் தமிழர்களாக முடியாது. அவர்களுடைய வாரிசுகளே ‘தமிழர்களானவர்கள்’ என்றுதான் இந்துவேதம் கூறுகிறது, ‘தமிழர்கள்’ என்றல்ல. அதாவது, தமிழரானவர்கள் இந்துவேதத்தை முழுமையாகக்

கற்க இயலாது. இந்துவேதத்தின் மூலவர்களாகவோ, காவலர்களாகவோ, நாயகர்களாகவோ, வாரிசுகளாகவோ ஆக முடியாது என்று இந்துவேதம் தெளிவாகக் கூறுகிறது. எனவே, தமிழர்களுக்கு அருளுலகில் முழுமையான ‘வாரிசுரிமை’, ‘தலைமை’, ‘ஆளுமை’ என்றென்றும் இருக்கின்றது. எனவே, இந்த உலகத்திற்கு அருளை வழங்க, இந்த உலக இருள்களையும் இன்னல்களையும் அகற்ற தமிழர்களால்தான் முடியும் அல்லது தமிழர்களாக ஆக்கப்பட்டவர்களால்தான் முடியும்.

8) இதேபோல், வாழையடி வாழையாக தமிழ்மொழியை தாய்மொழியாகக் கொண்டிருப்பவர்கள் பாரம்பரியத்தில், குடும்பத்தில் வரக்கூடியவர்களுக்கே எளிதில் பத்தி, சத்தி, சித்தி, முத்தி கிடைக்கும். எனவே நாத்திகர், பகுத்தறிவுவாதி, சீர்திருத்தவாதி, கடவுளை மறுப்பவர்கள், வெறுப்பவர்கள், தமிழின துரோகிகள், விரோதிகள், அந்நிய இனத்தை மதிப்பவர்கள், அந்நிய மொழியை மதிப்பவர்கள் ஆகியோருக்கு சத்தி சித்திகள் கிடைக்காது.

9) எனவே, தமிழர்களுக்காக உழைத்தவர்கள், உழைக்கின்றவர்கள், தமிழ்மொழிக்காக பாடுபட்டவர்கள், பாடுபடுகின்றவர்கள் இந்துவேதப்படி ‘தமிழர்கள்’ என்ற கௌரவ பட்டம் தரப்படுகிறார்கள். தமிழர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு உலகியலாக மதிக்கப்படுகிறார்கள் தமிழர்களாக.

10) தமிழ்நாட்டில்தான் எல்லாவகையான 1. அருவங்கள், 2. அருவுருவங்கள், 3. உருவ அருவங்கள், 4. உருவங்கள், 5. பயிரினங்கள், 6. உயிரினங்கள், 7. பயிரினங்களும் உயிரினங்களும் கலந்த வடிவங்கள், 8. உயிரினங்களுக்குள்ளே ஒன்றையொன்று கலந்த வடிவங்கள் (உதாரணம்: ஆட்டுத்தலை, கிளித்தலை, மாட்டுத்தலை, கழுகுத்தலை, குரங்குத்தலை, யானைத்தலை, மனித வடிவங்களோடு வழங்கப்பட்டுள்ளன), 9. மனிதரும் உயிரினமும் கலந்த வடிவங்கள் (உதாரணம் காமதேனு), 10. உயிரினங்களும், மனிதரும் கலந்த

வடிவங்கள் (உதாரணம்: நந்தி, மச்சகந்தி, நாகதேவதை) உள்ளன. எனவே, தமிழ்நாடுதான் இந்த உலகிலேயே கடவுள்களின் பிறப்பிடம், இருப்பிடம், காப்பிடம்.

11) **<u>தலைவன்</u>:-**

- உலக வரலாறுகள் அனைத்தையும் படித்தவர், பாடம் கேட்டவர்,
- உலகப் புரட்சிகளையெல்லாம் ஆரம்பம் முதல் இறுதி வரை தெரிந்து அறிந்து புரிந்தவர்;
- தமிழ்ப் பண்பாட்டை சமுதாய அளவிலும், அரசியல் அளவிலும், "பண்டைய தமிழகத்தில் அரசியல் மற்றும் சமுதாயத்தின் நிலைகள்" என்று ஆராய்ச்சி செய்து வருவதோடு சட்டப்பூர்வமாக ஐந்து ஆண்டுகள் ஆராய்ச்சி செய்தவர்,
- ஆதிசிவனாரின் அருளுலக வாரிசு;
- அரசகுரு, முதல் அரசரான சிவபெருமானின் அரச வாரிசு;
- இந்த உலகின் அரசபாரம்பரியத்தின் மூலமாகவும், முதலாகவும் இருந்தவர்;
- அரசகுலத்தின் தந்தை, அரசகுலத்தின் வாரிசு;
- முத்தமிழின் தந்தை;
- முத்தமிழ் மொழிக்குரிய 323 எழுத்துக்களையும் தெரிந்தவர்;
- இந்துவேத நாயகம், இந்துமதத் தந்தை;
- அண்டபேரண்டத்தவர்கள் அருளுலக சாதனங்களாக, கருவிகளாக வழங்கியுள்ள 108 திருப்பதிச் சக்கரங்களையும், 243 சத்திபீடச் சக்கரங்களையும், 1008 சீவாலயச் சக்கரங்களையும் எழுதிக் கொடுப்பதோடு, அவற்றைச் செயலாக்கிடும் வல்லமையும் பெற்றவர்;
- சன்னிதானம் ஆதீனம் .... எனும் 48 வகைப்பட்ட பட்டத்துக்குரியவர்களையும் உருவாக்கும் வல்லமை பெற்றவர்;

- அருளுலகைப் பற்றிய அனைத்து வகையான ஐயங்களையும் அகற்றும் வல்லமையையும், அநுபவத்தையும் பெற்றவர்.

12) **கடைசி எச்சரிக்கை:-**

சுற்றுப்பயணத்தில் கலந்து கொள்பவர்கள் ஒவ்வொருவரும் கட்டாயமாக உடன் வைத்திருக்க வேண்டியவை:

(1) தோள் பை => சிவப்பு வேட்டி, மஞ்சள் இடுப்புக் கச்சை,
(2) குறைந்தது ஒரு 21 உருத்திராக்க மாலை,
(3) துண்டு,
(4) தேங்காயெண்ணெய்.
(5) பற்பொடி,
(6) திருநீறு, குங்குமம்,
(7) தண்ணீர்,
(8) திண்பண்டங்கள் (snacks & biscuits),
(9) குறிப்பெடுக்கும் நோட்டு,
(10) வெள்ளைத்தாள் + கார்பன்,
(11) அஞ்சலட்டைகள் குறைந்தது 5, (உறை அல்ல)
(12) குறைந்தது 2 பேனாக்கள் (ball point),
(13) குறைந்தது 2 ரூபாய்க்கு stamps,
(14) அன்றாடப் பூசைமொழி குறைந்தது 2 அல்லது 3,
தமிழ்மொழி தெய்வமொழி 2 அல்லது 3,
மாநாட்டில் வெளியிட்ட இந்துவேதம் 2 அல்லது 3,
ஞானாச்சாரியார் வரலாறு (சில பாகங்கள்) 2 அல்லது 3,
திருநீறு குங்குமம் பொட்டலங்கள் குறைந்தது 50,
அறிக்கை மற்றும் அறிவிக்கைகள் 25 - 100.

(15) சில்லறைக் காசு 10 ரூபாய்க்கு; பணம் 25 முதல் 50 ரூபாய்.
(16) முடிகயிறு (கை) - 25,
கழுத்துக் கயிறு 25
தாயத்து 10, 10 அனைத்து விதங்கள்
ஒற்றை உருத்திராக்கம் - 10
(17) கண்ணாடி, சீப்பு, சோப்பு.

இவை 24 மணி நேரமும் தோளிலேயே இருக்க வேண்டும்.

26-6-1994 ஞாயிறு இரவு சுமார் 7:45 - 9:00 மணி வரை பெரியகுளத்து ஐயா காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காகபுசுண்டர் என்கிற சித்தர் காக்கையர் திரு ம. பழனிச்சாமி பிள்ளை அவர்கள் கூற குருதேவர் தன்னால் உட்காரவும் முடியாத நிலையில் ஓய்வு எடுத்தே ஆக வேண்டிய சூழ்நிலையில் அருளியவை. இதை எல்லோரும் அவரவர் திறமைக்கும், புலமைக்கும் ஏற்ப கட்டுரைகளாகத் தயாரித்து தலைமைப்பீடத்திற்கு அனுப்ப வேண்டும். இதிலுள்ள செய்திகளை குறைந்தது 4 சொற்பொழிவுக் கட்டுரைகளாக அரை மணி நேரம் பேசக் கூடிய அளவில் கட்டாயமாகத் தலைப்புக்களுடன் தயாரிக்க வேண்டும். 4 முதல் 10 கட்டுரைகள் தயாரிக்கலாம்.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. யாரால் எழுதப்பட்டது என்ற குறிப்பு நகலில் இல்லை.//**

# தமிழன் என்ற வெறி ஏன்?

ஏன் தமிழன் மட்டும்
ஒற்றுமைப்பட வேண்டும்? ஒன்றுதிரள வேண்டும்?
நல்லாயிருக்க வேண்டும்? விடுதலை வேண்டும்?
தன்மானம் இருக்க வேண்டும்?
தன்னம்பிக்கை இருக்க வேண்டும்?
இன உணர்வு இருக்க வேண்டும்?
இன மான உணர்வு இருக்க வேண்டும்?
இன உரிமை உணர்வு இருக்க வேண்டும்?
இனப் பற்று உணர்வு இருக்க வேண்டும்?
இனப் பெருமித உணர்வு இருக்க வேண்டும்?
பண்பாட்டுப் பிடிப்பு (பாதுகாப்பு) இருக்க வேண்டும்?
நாகரிகம் மாறக் கூடாது? (வேட்டி, சட்டை, குடுமி)

தமிழ் மொழி போதும், வேறு மொழி - விடம், நஞ்சாகும்;
தமிழ் நாட்டை விட்டுப் போகக் கூடாது. வேறு நாட்டை தாய்நாடாக ஏற்றுக் கொள்ளக் கூடாது;
தமிழ் இனத்துக்குள் உறவு வைத்துக் கொள்ள வேண்டும்;
உணவு முறை ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். ரொட்டி, பிசுகட், காபி, டீ வேண்டாம்.

இது ஒரு குறுகிய கண்ணோட்டமா? பரந்த நோக்கம் தேவையில்லையா? புதுமையில் நாட்டம் இல்லையா? கால மாற்றத்தோடு ஒத்துப் போகக் கூடாதா? பழமைவாதியாக இருக்க வேண்டுமா? தமிழ் நாட்டில் எந்த அன்னியருக்கும் இடமில்லையா? தமிழனுக்கு வளர்ச்சி இல்லாமல் போய்விடாதா? பண்பாடு, உடை, உணவு, சிகை அலங்காரம், உறவு முறை - இது அறிவியல் வளர்ச்சியாகுமா? தமிழரின் முன்னேற்றத்தைத் தடுத்து விடாதா?

**//பழனி பயிற்சி முகாமின் (16-09-1994) போது குருதேவர் எழுப்பிய சிந்தனைக்குரிய கேள்விகள். இவற்றிற்கான விடைகள் இந்நூலில் உள்ள கட்டுரைகளில் உள்ளன.//**



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி



மெய்ஞ்ஞானக்கொடி



12வது பதினெண்சித்தர் பீடாதிபதி

12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.

"... இந்தியாவில் பிறந்த அத்தனை பேர்களுமே இந்துக்கள்தான்...."

"இமயத்தின் விளிம்பு முதல் கன்னியாகுமரி கடலடி மணல்பரப்பு வரை வாழுகிறவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தமிழர்கள்தான்"

என்று பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி தமது அரசபாரம்பரியத்தில் குறிப்பிடுகின்றார்.

"... இந்தியாவின் ஒற்றுமையையும், வெற்றியையும் ஆதிசிவனார் தமிழில் அருளிய இந்துவேத அடிப்படையில் தான் உருவாக்க முடியும். இந்துவேத அடிப்படையில்தான் இந்துமத விழிச்சியையும், எழிச்சியையும் உருவாக்க முடியும்..."

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai. Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

https://newsletters.gurudevar.org
https://books.gurudevar.org
https://gurudevar.in
https://gurudevar.org
https://induism.org
Email: indhuism@gmail.com

காணிக்கை : ரூ15/-